**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 368/2023**
**Prosecution Witness - PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. வளர்மதி |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.07.2025.

(A1 and A2 are present. )

<u>முதல் விசாரணை</u>–

நான் திங்கள் நகர் பறையன் விளையில் வசித்துவருகிறேன். நான் வீட்டில் தான் இருக்கிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். 07.09.2015 அன்று காலை10 மணிக்கு எனது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி விட்டு வந்தது நான் வீட்டின் வெளியே உள்ள சிட்டவுட்டில் அடுப்பின் அருகில் சுடுதண்ணீர் குடித்துக்கொண்டிருக்கும்போது, எனது வீட்டின் மாடியில் எனது மாமியார் குடியிருந்தார். மாடி படியில் இருந்து எதிரி சாந்தி இறங்கிவந்தார். அவர் கையில் மண்ணெணெய் பாட்டில் வைத்திருந்தார். அதனை நான் கவனிக்கவில்லை. நான் வெளியே ரோட்டை பார்த்து உட்கார்ந்து இருந்தேன். அப்போது சாந்தி மண்ணெணெய் பாட்டில் தூக்கி என் மீது வீசினார். பாட்டிலை நான் கையில் பிடித்துவிட்டேன். மண்ணெணெய் என் மீது கொட்டிவிட்டது. உட்கார்ந்து இருந்த நான் உடனே எழும்பினேன். லைட்டரை வைத்து கொழுத்திவிட்டு சாந்தி கெட்ட வார்த்தை பேசிவிட்டு போய்விட்டார். நான் வீட்டிற்குள் போகநினைத்து பின்னர் முதல் மாடியில் இருந்த நான் கீழே சாடிவிட்டேன். எனது உடலில் இடது , வலது தொடை , இடது கை முழுவதும், மற்றும் இடது கால் , வலது தொடை, முதுகு, ஆகிய இடங்களில் நெருப்பு பற்றிவிட்டது. ( சாட்சி தனது இடது கையில் தீகாயம் தளும்புகளை காட்டுகிறார்)எனது அலறல் சத்தம் கேட்டு பக்கதில் இருந்த ஒரு ஆண் மற்றும் பெண் ஆகியோர் என்னை மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். குளச்சல் அரசு மருத்துவமணையில் இருந்து ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு சிகிட்சை கொடுத்தார்கள். போலீசாரிடம் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். நடந்த சம்பவத்தினை பற்றி போலீசாரிடம் கூறினேன். எதற்காக சம்பவம் நடந்தது என்று பற்றி கூறினேன். எனக்கு 2006ல் 17 பவுன் தாலி செயினை விற்று ஆஜர் எதிரி சாந்திக்கு ரூ.90000/– நானும் எனது கணவரும் கொடுத்தோம். ஆஜர் எதிரி சாந்தி எனது

கணவரின் உடன் பிறந்த தங்கை. அந்த பணத்தை திரும்ப தரமாட்டேன் கூறிய சாந்தி என்னை வீட்டில் இருந்து வெளியே போகும்படி சொன்னார். நான் பணத்தை கொடுக்காவிட்டால் வெளியே போகமாட்டேன் என்று சொன்னதால் பிரச்சனை ஏற்பட்டது. அதன் காரணமாக தான் வழக்கு சம்பவம் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார் வாக்குமூலம் தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் பாட்டிலில் (உடைந்த) தான் ஆஜர் எதிரி சாந்தி மண்ணெணெய்எடுத்துவந்தார். அது சா.பொ.1 ஆகும்.

<u>1 மற்றும் 2 ம் எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகார் வாக்குமூலத்தினை நான் எழுதவில்லை என்றால் சரிதான். அதனை போலீசார் எழுதினார்கள். எழுதியவரின் பெயர் விபரங்கள் தெரியாது. தீகாயங்கள் பட்டவுடன் எனக்கு மயக்கம் வரவில்லை. சுயநினைவில் இருந்தேன். மருத்துவமனையில் எனக்கு வலி குறைவதற்காக மயக்க மருந்து எதுவும் கொடுக்கவில்லை. நான் வலியுடன் தான் இருந்தேன். நான் , எனது கணவர் மற்றும் குழந்தைகள் முதல் மாடியில் தாமசித்து வந்தோம் என்றால், சரிதான். எங்களது சமையல் அறை முதல் மாடியில் உண்டு என்றால், சரிதான். எனது மாமனார் மாமியார் 2 வது மாடியில் தாமசித்தார்கள் என்றால், சரிதான். அவர்களுக்கான சமையல் அறை தரைதளத்தில் உள்ளது என்றால், சரிதான். போலீசாரிடம் வீட்டிற்கு வெளியே உள்ள சமையல் அறையில் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்ததாக போலீசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். போலீசார் விசாரணையில் எதிரி சாந்தி மேல்மாடியில் இருந்து கீழ்மாடிக்கு இறங்கிவந்தாக சொன்னேன். போலீசார் விசாரணையில் மண்ணெணெய் என் மேல்பட்டு தீபற்றி எரிந்தது என்று குறிப்பிட்டு சொன்னேன். எதிரி சாந்தி லைட்டரை வைத்து தீபற்ற வைத்தது பற்றி போலீசாரிடம் சொன்னேன். சம்பவ சமயத்தில் நான் நைலான் சாரி கட்டியிருந்தேன் என்றால், சரிதான். நான் மாடியில் இருந்து கீழே சாடி, கீழே இருந்த மணல் மீது விழுந்து, ராவி ( புரண்டு தேய்த்ததால்) நெருப்பை

அணைத்தேன். 2006 ல் 17 பவுன் செயினை விற்று எதிரி சாந்திக்கு ரூபாய் கொடுத்தது பற்றி போலீஸ் விசாரணையிலும், எனது புகாரிலும் சொன்னேன். அந்த பணத்தை திரும்பி தரமாட்டேன் என்று சாந்தி கூறியதாக போலீஸ் விசாரணையிலும் , எனது புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. வீட்டை விட்டு வெளியே போ என்று சாந்தி கூறியதாக போலீஸ் விசாரணையிலும் , எனது புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. பணத்தை திருப்பி கொடுத்தால் தான் வெளியே போவேன் என்று கூறியதாக போலீஸ் விசாரணையிலும் , எனது புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. பணம் அல்லது நகையை திருப்பி கொடுத்தால் தான் நான் போவேன் என்று கூறினேன். எங்களது வீட்டை ஒட்டி 1 சென்ட் பூமி தனியாக உள்ளது என்றால், சரிதான். மொத்தம் 2 சென்டில் எங்கள் வீடு 1 சென்டில் உள்ளது என்றால் சரிதான். அந்த 2 சென்டுகள் எனது மாமியார் இசக்கியம்மாள் (எ) புஸ்பத்திற்கு சொந்தமானது என்றால், சரிதான். அந்த 1 சென்ட் நிலத்தை எனது மாமியார் சாந்திக்கு 2008 ல் எழுதிக்கொடுத்தார் என்றால், சரிதான். அவ்வாறு எழுதிக்கொடுக்ககூடாது என்று நான் எனது மாமியார், மாமனார் மற்றும் எனது கணவரிடம் சண்டை போட்டேன் என்றால், சரியல்ல. 1 ம் எதிரி சாந்தியிடம் ஒரு சென்ட் சொத்தை எழுதிக்கொடுக்க வேண்டும் என்று நான் பிரச்சனை செய்தேன் என்றால், சரியல்ல. சாந்தி வீட்டிற்கு, நானும் எனது கணவர் சேர்ந்து சென்று பயங்கரமாக சண்டைபோட்டு அவர் வீட்டு கதவை உடைத்து அவரை மிரட்டினோம் என்றால், சரியல்ல. அது சம்பந்தமாக இரணியல் காவல் நிலையத்தில் அவர் புகார் கொடுத்தார் என்றால், சரியல்ல. காவல் நிலையத்தில் என்னை சமாதானப்படுத்தி அனுப்பினார்கள் என்றால், சரியல்ல. எனது மாமியார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இதனால் எனக்கு எனது மாமனார், மாமியார், 1 மற்றும் 2 ம் எதிரிகள் மீது விரோதம் இருந்தது என்றால், சரியல்ல. மன உளைச்சல் தான் இருந்தது. எனவே பழிவாங்கும் உள் நோக்கத்துடன் ஒரு சம்பவத்தை உருவாக்கி புகார் கொடுத்தேன் என்றால், சரியல்ல. எனது வீடு

இருக்கும் இடம் ஆள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால், சரிதான். ஆனால் எல்லோரும் வீட்டிற்குள் தான் இருப்போம். எனது வீட்டின் பக்கத்தில் டென்னிஸ் வீடு உள்ளது என்றால் சரிதான். சந்திரன் வீடு 150 அடி தள்ளி தூரத்தில் உள்ளது. சுந்தரர் வீடு இன்னும் அதிக தூரத்தில் உள்ளது. தங்கவேல் வீடு என் வீட்டிற்கு மேல் புறத்தில் 100 அடி தள்ளியுள்ளது. எனது வீட்டிற்கு முன்பு பிரபு வீடு உள்ளது என்றால், சரியல்ல. சுற்றி இருப்பவர்கள் எனக்கு உறவினர்கள் என்றால் , சரிதான். பக்கத்தில் இருக்கும் வீடுகளில் நிறையபேர் உண்டு . நான் கீழே விழுந்ததை நிறையபேர் பார்த்தார்கள். என் வீட்டிற்கு பக்கத்தில் திங்கள் நகர் சந்தை உண்டு என்றால், சரியல்ல. திங்கள் நகர் சந்தை மற்றும் Busstand தூரத்தில் உள்ளது. அவ்வாறு அங்கு ஆள் கூட்டம் உண்டு என்றால், சரிதான். அவ்வாறு அதிக நபர்கள் இருந்த இடத்தில் எதிரிகளை யாரும் பார்க்கவில்லை என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்ற உள் நோக்கத்துடன் நான் என் மீது சிறிய அளவில் மண்ணெணெய் ஊற்றி பற்ற வைத்து கொண்டேன் என்றாலும், அது அன்றைக்கு நான் நைலான் சேலை உடுத்தியிருந்ததால் எதிர்பாராத விதமாக பெரியதாக பற்றிக்கொண்டது என்றாலும், சரியல்ல. சா.பொ.1 போன்ற பாட்டில்கள் என் வீட்டில் தாராளமாக கிடைக்கும் என்றால் சரியல்ல. பாட்டில் என் மேல் பட்டவுடன் உடைய வில்லை. நான் அதை பிடித்து கீழே போட்டேன் அப்போது உடைந்தது. சா.பொ.1 பாட்டில் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் நான் தவறுதலாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**